[1979 ஏப்ரல் 30

பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

உ. அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

எ. பேரவையின் நடவடிக்கைகள் பற்றிய புள்ளி விவரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவை 9—2—1979 முதல் கூடியது. கூடிய மொத்த நாட்கள் 59. மாலையில் பேரவை நடந்த நாட்கள் 8. மிக அதிக நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது இதுவே முதல் முறை.

அனுமதிக்கப்பெற்று பேரவையில் விடையளிக்கப்பெற்ற உடுக்குறியிட்ட வினாக்கள் 889. இது இந்த நடப்புத்தொடர்க் கூட்டத்தில் மட்டும் விடையளிக்கப்பட்டவைகள் ஆகும். 1971ஆம் ஆண்டு முதல் 1976ஆம் ஆண்டு வரையில் 6,402 வினாக்கள் விடையளிக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால், இந்தக் கூட்டத்தொடரில் மட்டும் விடையளிக்கப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள் 889.

திரு. அழகிரிசாமி அவர்கள் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். இந்தத் தொடர் கூட்டத்தில் அனுமதிக்கப்பட்டு விடையளிக்கப்பட்ட குறுகிய கால வினாக்கள் 56. முந்திய ஐந்தாண்டுகளில் 41; அனுமதிக்கப்பெற்ற மொத்த துணை வினாக்கள் 2,773.

கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் — வரப்பெற்ற அறிவிப்புக்கள் 627 இந்தத் தொடர் கூட்டத்தில் மட்டும்; முந்திய ஐந்தாண்டுகளில் அதாவது 1971—76 வரை 1,326 தான். அவைக்கு அளிக்கப்பெற்றவை 97; முந்திய ஐந்தாண்டுகளில் 271.

இந்தத் தொடர் கூட்டத்தில் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வரப்பெற்றவை 424, முந்திய ஐந்தாண்டுகளில் 1,270 ; எடுத்துக் கொள்ளப்பெற்றவை 130; முந்திய ஐந்தாண்டுகளில் 530. அவை உரிமை மீறல் பிரச்சினைகள்—வரப்பெற்ற அறிவிப்புகள் 51, முந்திய ஐந்தாண்டுகளில் அவையில் எடுக்கப்பட்டு தீர்ப்பு அளிக்கப்பட்டவை 29; முந்திய ஐந்தாண்டுகளில் 42; அனுமதி மறுக்கப்பட்டவை 19, முந்திய ஐந்தாண்டுகளில் 45; வற்புறுத்தப்படாதவை 2.

மானியக் கோரிக்கைகளுக்கு வரப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் 3,882, அனுமதிக்கப்பட்டவை 3,202.

நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகள் 44; குழுவுக்கு அனுப்பப்பட்ட சட்ட முன்வடிவுகள் 3.

திரு. சோ. அழகர்சாமி : நாங்கள் பல கேள்விகள் கொடுத்திருக்கிறோம். இந்தத் தொடர் கூட்டம் முடிவுற்றவுடன் அவை காலாவதியாகிவிடுமா அல்லது அப்படியே வைக்கப்பட்டு வருகிற கூட்டத்தின்போது பதில்கள் அளிக்கப்படுமா?

1979 ஏப்ரல் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விகள் அப்படியே தொடர்ந்து இருக்கும்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: நாங்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களுக்கெல்லாம் பதில்கள் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த வழக்கம் எப்போதும் கிடையாது.

(5) அரசினர் தீர்மானம்—(தொடர்ச்சி)

(ஆ) பேரவை நாள் குறிப்பிடாமல் ஒத்திவைக்கப் பெறுவது குறித்து.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று மாத காலமாக மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையைத் தொடர்ந்து நடத்திக் கொடுத்து இன்று இந்த அவை முடிய இருக்கிறது. அவர்கள் மன நிம்மதியோடும் நிறைவோடும் செல்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

''பேரவையின் அலுவல்கள் இன்றோடு முடிவடைவதால் பேரவை இன்றிலிருந்து மீண்டும் கூடும்'' பேரவை விதியில் 16 (1) இன்படி நாள் குறிப்பிடப்பெறாது ஒத்திவைக்கப் பெறவேண்டும்'' என முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிந்து பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுகிறது. நன்றி. வணக்கம்.

பின்னர் பேரவை 1–48 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

156. 1978 ஜூலை 25–ஆம் நாளுக்கும் 28–ஆம் நாளுக்கும் இடையே விழுப்புரத்தில் நடந்த கலவரங்கள் குறித்து விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பெற்ற ஓய்வுபெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு திரு. ஆர். சதாசிவம் விசாரணைக் கமிஷனின் அறிக்கை [1952ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது (தமிழ்).]